JL
LB
NH
180825

# ஹோமியோ பிரகடனம்.

## (HOMEO BULLETIN)

பிரதி ஆங்கில மாதம் 15-ம் தேதி
வெளியிடப்படும்.

சந்தா விபரம் :
வருடச் சந்தா ரூ. 3/-
தனிப் பிரதி அணு 0—4—0.

*வெளியிடுபவர் :*
*பிரின்ஸ்பால்* S. SRINIVASAN,
*ஹோமியோ, பிஸிஷியன் & ஸர்ஜன்,*
...மான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட்,
திருவாரூர்.

JL
LB
NG1
180825

## உங்கள் அறிவையும், அனுபவத்தையும்
## வளரச்செய்யும்
# ஹோமியோ பிரகடனத்தின்
## ச ந் தா தா ர ரா க
## நீங்கள் சேர்ந்துவிட்டீர்களா ?


இல்லையென்ருல் உடனே கீழ்க்கண்ட பாரத்தை பூர்த்திசெய்து உடனே ரூ. 3/-வருஷ சந்தாவை அனுப்பிவையுங்கள்.

**தென்னிந்தியாவிலேயே சிறந்ததொரு மாதப் பிரகடனம் இதுதான்.**

நெ. தேதி..........................

பெயர்..........................................................

முழு விலாசமும், தொழிலும் } ..............................................

சந்தாத்தொகை..............................ம. ஆ. நெ...............


# பொருளடக்கம்.

☆


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | காக்கை வலிப்பு | 1 |
| 2. | கலப்படம் இல்லாத ஹோமியோபதி வைத்தியம் | 4 |
| 3. | கேள்விப் பெட்டி | 12 |
| 4. | அனுபவ கேசுகள் | 13 |
| 5. | வட்டாரச் செய்திகள் | 19 |
| 6. | போலியைக் கண்டு அச்சம் ஏன் ? | 23 |

மற்றும் பல.

நாது மதருஸ் பிராஞ்சு.

3, தம்புச்செட்டித் தெருவில் (ஹைகோர்டிற்கு நேர் எதிரில்) 1958-ஆம் மார்ச்சு மாதம் முதற்கொண்டு நமது இன்ஸ்டிட்யூட்டின் மருந்து விற்பனை இலாகா ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது.

சென்னை, மற்றும் பக்கத்து ஊர்களிலிருந்தும் ஹோமியோபதி டாக்டர்கள் யாவருக்கும் சுலபமாக மருந்துகள் எல்லாவிதமும் கிடைக்கும்படி பெரும் அளவில் ஸ்டாக் செய்திருக்கிறோம்.

உங்கள் ஒத்துழைப்பிற்கும் எங்கள் வணக்கம்.

# ஹோமியோ பிரகடனம்

## APRIL 1961.

### காக்கை வலிப்பு.

—o—

இவ் வியாதியின் குறிகளைப்பற்றியோ விவரமான ஆராய்ச்சிக் கட்டுரை எழுத இங்கு இடமில்லை. ஒரு பிரபல அலோபதி டாக்டர் வெளியிட்டிருப்பதைத் தழுவி இங்கு எழுத வேண்டியது அவசியமாகிறது.

பொதுமக்களின் மனதில் வேரூன்றி இருக்கும் சில சந்தேகங்களைப் போக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

அவர் சொல்லுவதின் சாராம்சமாவது: காக்கை வலிப்பு தொன்றுதொட்ட நாட்களினின்று மனித குலத்தை பாதித்து வந்திருக்கின்றது என்பதற்கு அத்தாட்சிகள் இருக்கின்றன. அது திடீரென்று தோன்றுவது பலருக்கு பீதியை உண்டாக்குகிறது. ஜூலியஸ் சீஸர், மகா அலெக்ஸாந்தர் முதலிய பிரபல பெரிய மனிதர்களும் தாக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது.

மூளையில் சில நரம்பு செல்கள் தூண்டப்படுவதின் பயனாக காக்கை வலிப்பு ஏற்படும். "மூளையின் தும்மல்" என்று இதற்கு பொருத்தமான பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இவ்வியாதிக்கு அதிகமாக மருந்து கொடுப்பது தவறு. சமுதாயத்தில் இவ்வியாதியைக் கண்டு பீதியும் சம்சயமும் படுவது அவசியமில்லாதது. இம் மக்கள் சந்தேகக் கண்களுடன் பார்க்கப்படுகிறார்கள் என்பது வருந்தத்தக்கது. பேய் பிசாசுகளால் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள் என அவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். இந்த முன்னேற்றமடைந்த காலத்திலும் சில டாக்டர்களுங்கூட பழங்கொள்கைகளை விட்டு புதிய நோக்குகள் கொண்டார்கள் இல்லை.

180825

காக்கை வலிப்பு உள்ள நோயாளிகளின் அடிப்படைக் காரணத்தை டாக்டர்கள் ஆராயவேண்டும். காரணத்திற்கு தக்க மருந்துகளை பொறுக்கிக் கொடுத்து நீடித்த பல வருட காலம் தினம் தினம் மருந்தை உட்கொள்ள வற்புறுத்த வேண்டும். அடிக்கடி நோயாளியை பரிசோதிக்க வேண்டும். அத்துடன் நோயாளி இவ்வியாதியைப் பற்றி அதிகமாக கவலையுறவேண்டாம் என்றும் மற்றவர்களைப் போலவே வாழ்வில் படிப்பு, வேலை, விளையாட்டு முதலியவற்றில் பங்கு கொள்ள முடியும் என்றும் உத்சாகப் படுத்த வேண்டும். குழந்தைகளாய் இருந்தால் பெற்றோர்கள் சாக்கிரதையாக உத்சாகபங்கப்படுத்தாமல் வளர்த்து அவர்களை சமுதாயத்திற்கு தகுந்தவர்களாக ஆக்கவேண்டும். தாழ்வு மனப்பான்மை அக் குழந்தைகளிடம் வளராதபடி பெற்றோர்கள் பார்த்துவளர்க்க வேண்டும்.

குழந்தைகள் உத்சாகமாக படிப்பிலும்,விளையாட்டிலும் கலந்துகொள்ள வேண்டும். மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டால்தான் படிப்பை நிறுத்த வேண்டும். தண்ணீர், நெருப்பு அல்லது வண்டிகள் கூட்டமாக நிற்குமிடத்து குழந்தைகள் விளையாடாது பார்த்துக்கொள்ள வேண்டும்.

வலிப்புகள் அதிகமாக வந்தால் வீட்டிலேயே தனிப்பட போதிக்கச் செய்யலாம்.

மற்றபடி தொழிலகங்களிலும் இம்மாதிரி வலிப்புகள் வருபவர்களுக்கு சமுதாயம் வழி வகுக்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

"நவீன மருந்துகள் இவ்வியாதியை அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் என்பதே இந்த துரதிர்ஷ்டசாலிகளுக்கு மன சந்துஷ்டி அளிக்தும என்றும் கூறுகிறார்."



மேற்சொன்னவை ஒரு பிரபல அலோபதி டாக்டர் அவர்களின் கருத்து.

பிரபல ஹோமியோபதி டாக்டர்களின் கருத்துக்கூட இதே போல்தான் பிரதிபலிக்கிறது. ஐக்கிய அமெரிக்க நாட்டில்ஓர்பிரபல டாக்டர் மூளையின் சிலவலிப்பு உண்டாக்கும் செபிகளை நுண்ணிய கருவிகளைக் கொண்டு தீய்த்து விட்டால் இவ்வலிப்பு வராது தடுத்துவிடும் என்று ஆராய்ந்து அறிந்து கண்டுள்ளார். அதன் பிரகாரம் அநேகருக்கு செய்தும் இருக்கிறார். இந்த இரண சிகிச்சை எவ்வளவு தூரம் பயன்படும் என்பதை அறிய சில காலம் செல்லும்.

ஹோமியோபதி முறையில் நமது ஆசிரியர் அநேக ஆராய்ச்சிகள் செய்துள்ளார். காக்கை வலிப்புகள் அநேக விதங்கள் இருக்கின்றன. அதேபோல் காரணங்களும் வேறுபடுகின்றன. கிரந்தி நீரினால், பரம்பரையினால், மூளை வளர்ச்சி இன்மையினால், அல்லது மூளைக்கோளாறினால் ஏற்படும் சில வகைகள் சௌகரியம் செய்யப்படுவது இயலாத காரியம். பொதுவாக மற்ற வகைகளுக்கு சௌகரியம் செய்ய விசேட மருந்துகள் நமது லாபரட்டரியில் தயார் செய்யப் படுகின்றன.

ஹோமியோதி முறையில் இவ்வியாதியை அறவே நீக்குவதற்கான வழிகள் இன்னுஞ்சில செய்யவேண்டியிருக்கின்றன.

இதற்கென்று ஒரு ஆண்டிபயோடிக் மருந்து தயார் செய்யப்பட்டிருக்கிறது. விபரங்கள் அடுத்த மாத பிரசுரத்தில் பிரசுரிக்கப்படும்.

எல்லா ஹோமியோபதி டாக்டர்களும் இச்சந்தர்ப்பத்தை பயன் படுத்திக்கொண்டு ஒத்துழைத்தால் பெரும்பாலான

காக்கை வலிப்பு நோயாளிகளுக்கு நிவாரணமளிக்கலாம். அளிக்கவும் கூடும். இன்னும் பல ஆண்டுகளுக்கு அலோபதி வைத்தியத்தில் இவ்வியாதிக்கு தக்க சிறந்த மருந்து, கண்டு பிடித்தறிய முடியாது என்பதை நாம் நினைவுறுத்திக் கொண்டால் ஹோமியோபதியர்களான நாம் இந்த சிக்கலான வியாதியை நிவாரணமளிக்க முந்திக்கொள்ள வேண்டும் என்பது தெரியவரும்.

## திருச்சி ஆல் தமிழ்நாடு ஹோமியோபதி டாக்டர்களின் சங்கத்தின் ஸ்பெஷல் கூட்டம்.

—o—

26—3—61 ஞாயிறு மைதிரேயி வித்யா சாலையில் நடைபெற்றது. திருவாரூர் Dr. சீனிவாசன் தலைமை வகித்தார்,

## கலப்படம் இல்லாத ஹோமியோதி வைத்தியம்.

—o—

பிற்பகல் மதிய உணவிற்கு பிறகு சுமார் 200 ஹோமியோதி டாக்டர்களும் மற்ற மக்களும் திரண்டு வந்திருந்து கூட்டத்தை சிறப்பிக்க செய்திருந்தனர்.

Dr. M. சுந்தரம் அவர்கள் ஹோமியோதி முறையில் கலப்படமில்லாத ஹோமியோபதி மருந்துகளையே உபயோகிக்க வேண்டும் என்றும், சில போலி ஹோமியோபதியர்களின் அலோபதி மருந்துகளை கையாளுவது மிகவும்



வருந்தத்தக்கது என்றும், அதை அவசியம் கண்டிக்க வேண்டும் என்றும் அத்துடன் இம்மாதிரி ஹோமியோபதியர்கள் மற்ற முறை மருந்துகளை கையாளுவது முக்கியமாக ஹோமியோபதி இன்ஸ்டிடியூட் தலைவர்கள் சரியானபடி பாடம் போதிக்காததுதாம் என்பதையும் வலியுறுத்தினர். சில தலைவர்கள் மற்றவர்களைக் கூட்டிக்கொண்டு தங்கள் படிப்புத் திறன் குறைவாயிருப்பினும் மற்ற எல்லோரையும் காட்டிலும் தாங்களே பெரியவர்களாகவும் தங்கள் படிப்பே உயர்ந்தது என்றும் கூறிக்கொண்டு மற்றவர்களை தூதிப்பதையும் சுட்டிக் காட்டினர்.

இம்மாதிரி அகந்தை பிடித்தவர்கள் தாம் தங்கள் ஆற்றலின்மையை மறைப்பதற்காவும் தாங்கள் தப்பும் தவறுமாக பிரசாரம் செய்வதை மறைப்பதற்காவும் மற்றவர்களை தாழ்மையாக பேசவேண்டும் என்ற எண்ணத்துடன் திரிகிறார்கள் என்பதை உதாரணத்துடன் எடுத்து விளக்கி தெளிவாக்கினர். உதாரணமாக ஒரு மருந்தின் மேல் எழுயிருப்பதை வாசித்து காண்பித்து அந்த மருந்தின்மேல் எழுதியிருக்கும் மருந்துகளுக்கும் அதனுள்ளே உள்ள மருந்திற்கும்சம்பந்தமே இல்லை என்றும் உள்ளொன்று வைத்து புறமொன்று எழுதி மக்களை ஏமாற்றுபவர்கள் மலிந்து விட்டனர் என்றும் நிருபித்தார் இம்மாதிரி போலி தலைவர்களை ஹோமியோபதி சங்கங்கள் டாக்டர்கள் அகற்ற முயற்சிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

டாக்டர்கள் அனந்தர், சார், முத்து. ராமையர், மகாதேவன் முதலியோர்கள் ஹோமியோபதி முறையை சுத்தமாக கையாளவேண்டிய முறையைப்பற்றியும் சுத்தமான ஹோமியோபதி முறையில் தயார் செய்யும் மருந்தே மக்களுக்கு தீரக்கூடிய எல்லா வியாதிகளுக்கும் போதுமானதென்றும் கூறினர்.

அத்துடன் புதுமாதிரியான ஜெர்மோமைசின் முதலான மருந்துகளைப்பற்றி குறிப்பிட்டார். நமது Dr. சீனிவாசன் அவர்கள் சுத்த உண்மையான ஹோமியோபதி வைத்தியம் என்றால் என்ன, கண்டுபிடித்த Dr. சாமுவேல் ஹானிமான் என்ன அபிப்பிராயப்பட்டிருக்கிறார், அவர் பின் தோன்றிய Dr. சூஸ்லர், Dr. பாச் முதலானவர்கள் இம்முறையை புதுத் துறைகளில் உபயோகப்படுத்தி எப்படி ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள் என்பதை பற்றியும் சற்று விரிவாக எடுத்துக் கூறினார்.

ஒரு டாக்டர் சுத்த ஹோமியோபதி கையாளுவது சிரமம் என்றும், அப்படி கையாளுவது எல்லா அக்யூட் வியாதிகளுக்கும் அலோபதி முறை உடனே குணமளிக்கக் கூடிய துரித பலன் அளிக்கவல்ல மருந்துகள் குறைவு என்றும் கூறினார். இதை மறுத்து கூறிய Dr. சீனிவாசன் ஹோமியோபதி முறையில் இரண்டு வகை மருந்துகள் இருக்கின்றன. ஒன்று தற்காலிகமாக கடுமையான குறிகளை சமனப்படுத்துவதற்காக உபயோகப்படுவது. இரண்டாவது தேகவாகுகளை அறிந்துகொண்டு அதற்கு தக்க மருந்து கொடுத்து பூர்ணமளிக்கக் கூடியது என்றும், அக்யூட் வியாதிகள் எல்லாம் கிரானிக் வியாதிகளின் தற்காலிக தோற்றம் என்றும் அவைகளுக்கு தனித் தன்மையான ஜீவியம் கிடையாது என்றும் இணர்த்தினார். ஆகவே எந்த வியாதியை பூரணமாக குணப்படுத்த வேண்டுமென்றாலும் அக்யூட் தோற்றத்திற்கென்று துரித சமன மருந்துகளும் பூரண குணத்திற்கென்று நீடித்து வேலை செய்யும் மருந்துகளும் ஆக இரண்டு விதமான மருந்துகளும் வேலை செய்யப் படவேண்டும். என்பதையும் விரிவாக எடுத்துரைத்தார்.



பழைய பித்தானே, பித்தான் என பிதற்றும் பத்தாம் பசலிகளும் தான்தோன்றி தலைவர்களும், புத்தகப்புழுக்களும் பணமூட்டைகளும் நம் செந்தமிழ் நாட்டில் இருக்க ஹோமியோபதி மற்ற மேலைநாடுகளில் அடைந்திருக்கும் அவல நிலைமையையே அடையவேண்டியிருக்கும் என்பதை குறிப்பிட்டார்.

"ஏமாறுபவர் இருக்கும்வரை ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்!"

இந்நிலைதான் இப்போது நிலவுகிறது. ஹோமியோபதி டாக்டர்களிடையே இது நல்லதற்கு அறிகுறியல்ல பின்னர் லெவிகோ ஸ்கூகம், அட்டை, (சாங்விஸிகோ) முதலிய பலான மருந்துகளைப்பற்றியும் அது எப்படி ஹோமியோபதி முறையில் புகுத்தப்பட்டன என்ற ஆராய்ச்சியைப்பற்றியும் விளக்கினார்.

இப்பொழுது மனிதர்கள் வைட்டமின்களை விட்டு விட்டு தேவையானபோது வைட்டமின்களை தயாரிக்கும் சக்தியுள்ள பாசி போன்ற பச்சை செடிகளை தின்று வாழ வேண்டிய காலம் வந்துவிட்டது. உதாரணமாக வாழை இலையினின்று பசுமையான குளோரோபில் என்ற பசுங்கனிகம் தனித்துப் பிரிக்கப்பட்டு உணவுப்பொருளாக பயன்படுத்தப்படுகிறது. இது மாத்திரைகளாக தயார்செய்து மேலை நாட்டவர் நம் தலையில் கட்டுகிறார்கள். அந்தோ பரிதாபம்!

வட நாட்டில் ஆயுர்வேத இரசாயன முறைபடி பஸ்பங்கள் தயார் செய்யப்பட்டு அவைகள் ஹோமியோபதி முறைப்படி எப்படி கையாளப்படுகின்றன என்பதைப்பற்றியும் விவரித்தார். உதாரணமாக சொர்ண வங்க பஸ்பம் அப்படியே கொடுப்பதைக்காட்டிலும் அதை 2x, 3x வீர்யங்

களாக வீர்யப்படுத்தி சின்னாட்கள் கொடுத்து வந்தால் அதிக மான பலனும் நீடித்த குணமும் கிடைக்கிறது.

ஹோமியோபதி முறையில் ஒத்தக்குறிகளுள்ள "ஆர்னிதோகாலம்" போன்ற மருந்துகள் இதிலேயே காணக் கிடைக்கின்றன.

அதேமாதிரி இப்பஸ்பங்களையும் உபயோகிக்கலாம் என்று விவரித்தார்.

ஹோமியோபதி முறையில் அநேக மருந்துகள் முழு ப்ரூவிங் செய்யப்படவில்லை. உதாரணமாக "சீபேல்" முதலியன. எம் மருந்தையும் உடலில் கணிசமான தசை மாறு பாடுகளை ஏற்படுத்தும் அளவிற்கு உட்கொண்டு ப்ரூவிங் செய்வது சாத்தியமல்ல. ஏனெனில் தசைமாறுபாடுகள் அதிக மாக ஏற்பட்டு விட்டால் அதை நிவர்த்தி செய்ய வைத்தியர் களால் முடியாது. ஆதலின் ஓரளவிற்குதான் மருந்துகளை ப்ரூவ் செய்ய முடியும். அதைக் கொண்டே என்னென்ன வியாதிகளுக்கு உபயோகப்படுத்தலாம் என்பதை அறிவுள்ள வர் நிர்ணயிக்கலாம்.

அதே போன்று ஒருவியாதி மற்றொருவியாதியாக பரிணமிப்பதைப்பற்றி புள்ளி விவரங்களுடன் விவரித்தார். அக்யூட் வியாதியான மலேரியாவை அடக்க அடக்க புற்று நோயாக பரிணமிக்கிறது. இதற்கு ஈஜிப்ட் தேசத்தின் சரித்திரத்தை எடுத்துக்காட்டி விளக்கினார். கார்டிசோன் முதலிய மருந்து எப்படி வியாதியை அமுக்குகிறது என்பதை யும் அணைகட்டிய நதிபோல் ஹோமியோபதி முறையில் உபயோகிக்கப்பட்டால் அவை உபயோகமுள்ளதாக மாறு வதையும் குறிப்பிட்டார். கார்ட்டிசோனை ஒரு பச்சிலை

## வினாவும் — விடையும்,
## நேயர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

ஹோமியோபதி வைத்தியம், விஞ்ஞானம் போன்ற விஷயங்களை பற்றிய வினாக்களுக்கு நமது ஆசிரியர் அவர்களே விடையளிப்பார்கள். ஒருவரே ஒரே தடவையில் மூன்று வினாக்கள் வரை எழுதலாம்.

கேள்விகளை விபரமாகவும், தெளிவாகவும் எழுதி விலாசத்தையும் நன்றாக குறிப்பிட்டு அனுப்பவும். கார்டில் விலாசம் எழுத வேண்டிய பகுதியில், விலாசத்தை எழுதா மல் அடியில் இருக்கும் கூப்பனைக் கத்தரித்து, அதைக் கார்டில் ஒட்டி அஞ்சல் செய்து விடவேண்டும். கவரில் அனுப்பப்படுகிற கேள்விகளுக்கும், கூப்பன் ஒட்டப்படாமல் எழுதி அனுப்பும் கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்பட மாட்டாது.

கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது பதில் அளிக்காமல் நிறுத்தி வைக்கவோ, திருத்தி அமைக்கவோ ஆசிரியருக்கு பூரண அதிகாரம் உண்டு. கேள்விகளின் முக்கியத்துவத்தை பொருத்து வரிசை கிரமத்தில் பதில் அளிக்கப்படுமாகையால் இது சம்பந்தமாக கடிதப்போக்கு வரத்துக்கள் கவனிக்கப் படமாட்டா.

கேள்விகள் அனுப்புவோர், தங்கள் முழுவிலாசத்தையும் எண்ணையும் குறிப்பிட்டு எழுதவேண்டும்.

இங்கே கத்ரிக்கவும்:

"ஹோமியோபதி"
"கேள்விப் பெட்டி"
ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட்,
த. பெ. எண். 19
திருவாரூர்.
April : 61.

# கேள்விப் பெட்டி.

## அறிவிற் சிறந்த பதில்கள்

I. எ. இ. ஷண்முகம், சென்னை-21

1. அலோபதி ஆண்டிபயோடிக் மருந்துகளைப் போன்று தங்கள் தயாரிப்புகள் எவ்வாறு வியாதிகளை சௌககியப்படுத்த உதவுகின்றன? எந்தெந்த வியாதிகளுக்கு எந்தெந்த மருந்துகளை உபயோகப்படுத்தலாம். செப்டரி போன்று வை மருந்துகளின் பயன்களை குறிப்பிடவும்.

எங்கள் மாதப் பத்திரிகை பிரகடனத்தை தொடர்ந்து படிப்பது இல்லை போலும்.

உதாரணத்திற்கு ஹோமிசிலின் என்ற எங்கள் பவுடர் மருந்து அலோபதி பெனிசிலியம் போன்று கிடைக்கின்றன. இது ஹோமியோபதி முறையில் தயார் செய்யப்பட்ட ஆண்டிபயோடிக் என்று சொல்லப்படலாம். அதே மாதிரி செப்சிலின் என்ற பவுடர் மருந்தை தயார் செய்திருக்கிறோம். இரண்டும் இரண்டு விதமான சிறந்த மருந்துகள்.

ஆண்டிபயோடிக் என்றால் உயிருள்ள பாக்டீரியா கிருமிகள், பூசான வகைகள் முதலியன தயார் செய்யும் ஒரு வகை பொருள். அப்பொருள் பாக்டீரியா கிருமிகளை வளரச் செய்யாமல் தடுக்கவோ அல்லது அழிக்கவோ சக்தி உடையது.



சத்துடன் கலந்து உபயோகப்படுத்தப் பட்டால் எல்லாவிதமான மது மோகத்திற்கும் சிறந்த மருந்தாக இருப்பதை தன் அனுபவத்தில் விளக்கினார். தன்னால் புதிதாக கண்டுபிடிக்கப் பட்ட ஜெர்மோமைசின் காப்சியூல்கள் அலோபதி ஆரியோமைசின் என்ற மருந்துகளைப் போன்று ஆண்டிபயோடிக் மருந்தாக பயன்படுகிறது என்றும், தன் தயாரிப்பான செப்ஸிலின் என்ற மருந்து அலோபதி ஸ்ட்ரெப்டோமைசின் போன்ற ஆண்டிபயோடிக் மருந்து மாதிரி டீபி முதலான வியாதிகளில் வேலைசெய்கிறது என்றும், ஹோமிசிலின் என்பது அலோபதிக் பெனிசிலின் போன்று உபயோகப் படுத்தப்படுகிறது என்றும் விளக்கினார். இம்மாதிரி புது உருவத்தில் நவீன ஆராய்ச்சியின் பயனை கண்டு பிடித்து அளிக்கப்பட்டுள்ள மருந்துகள் தாம் ஹோமியோபதியர்களின் கௌரவத்தை நிலைநாட்டக்கூடியது என்றும் விளக்கினார். இவைகள் சுத்த ஹோமியோபதி மருந்துகள் என்றும் விளக்கினார். இம்மருந்துகளை கையாளுவதால் இழுக்காறு உண்டாகாது. தலைவலிக்கு ஹோமியோபதி போர்வைக்குள் ஹோமியோபதி மருந்தென்றும் கூறிக்கொண்டு அலோபதி மருந்துகள் கொடுப்பதோ கையாளுவதோ இகழத்தக்க செயலாகும். படித்த நோயாளிகளுக்கு இச்சமாசாரங்கள் தெரிந்தால் ஹோமியோபதி டாக்டர்கள் தொழிலே நடத்த இயலாது. அஸ்னியா சாதியில் அநேக மருந்துகள் ஹோமியோபதி முறையில் தலைவலிக்கென்றே இருக்கின்றன. அதெல்லாம் விடுத்து அமிடோபைரின், காபீன், குனைன் ஆஸ்ப்பிரின் போன்ற மருந்துகளை தலைவலிக்கென்று ஹோமியோபதியர்கள் உபயோகிப்பது இகழத்தக்கசெயல்.

சல்பதயோசால், கார்ட்டிசோன், பெனிசிலியம் A. C. T. H. முதலான மருந்துகளை எப்படி

உபயோகிப்பது என்பதைப்பற்றியும்தான் ஸ்பதயோசாலை ப்ளுவ் செய்து அனுபவத்திற்கு கொண்டுவந்திருக்கிறார் என்பதைப்பற்றியும் எந்தெந்த வியாதிகளுக்கு உபயோகப் படுத்தலாம் என்பதைப் பற்றிவும் சுருங்கக்கூறி விளங்க வைத்தார்.

ஜெர்மோமைசின் போன்ற புதிய மருந்துகள் புதிய உருவத்தில் நவீனமக்களின் விருப்பத்திற்கு தகுந்தமாதிரி, தயார்செய்து கொடுப்பதில் இதுவரையில் இந்தியாவிலேயே திருவாரூர் லாபொரட்டரி ஒன்றுதான் இருக்கிறது. இன்னும் வீர்யப்படுத்தப்பட்ட ஸ்பெஷல் பஸ்பங்கள் ஆயுர்வேத இன்ஜெக்ஷன்கள் சித்தாதி மருந்துகள் முதலியன நவீன உருவத்தில் நமது லாபொரட்டரி தயார் செய்கிறது.

மருந்துகளை சிறந்த முறையிலும் நல்ல பலன் அளிக்க வல்லதெனவும் தயார் செய்து கொடுப்பது திருவாரூர் லாபரெட்டரி ஒன்றுதான் என்பது மிகைப்பட்டதல்ல.

இப்புது மருந்துகளைப் பற்றி அனுபவக் கேஸ்களும் முக்கிய குறியீடுகளும் அவ்வப்போது நமது ஹோமியோ பிரகடனம் மூலமாக வெளியிடப்படும் என்பதையும் குறிப்பிட்டார்.

அங்கு குழுமிருந்த பல டாக்டர்கள் பற்பல விஷயங்களைப்பற்றி பல கேள்விகளைக் கேட்டனர். அக் கேள்விகளுக்கு தக்க பதிலிறுத்த பின் கூட்டம் இனிது முடிவடைந்தது.



எங்களால் தயார் செய்யப்படும் செப்சிலின், ஹோமி சிலின் மருந்துகளைப் பற்றிய விபரங்களை தனிப்பட கேட்டு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

2. உடலில் எந்தெந்த பாகங்களில் எவ்வாறு இன்ட்ரா மஸ்குலர், இண்ட்ரா வீனஸ், சப்குடேனியஸ் இன்ட்ரா டெர்மல் இஞ்சக்ஷன்களை போடலாம்? இவ்வகைகளில் உபயோகப்படும் உமது தயாரிப்புகள் யாவை?

இக் கேள்விக்கு பதில் எங்களால் அச்சிடப்பட்டிருக்கும் இஞ்செக்ஷன் கைப் புத்தகத்திலிலும், விலைப்பட்டியிலி லும் விலை விபரமாக கிடைக்கும். புத்தகங்கள் எங்கள் மதராஸ் பிராஞ்சில் (3/8 தம்புச்செட்டித் தெரு, மதராஸ்-1) கிடைக்கும்.

எங்கள் நேர்முக வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற்றுக்கொள்ளவும்.

## "அனுபவ கேசுகள்"

—o—

P. R. சிவசுப்ரமணியம், M. I. H., கோயம்புத்தூர்.

—o—

N. ஷண்முகம் வயது 28. ஆண். வியாபாரி. நல்ல உடல் பலமுள்ள இவர் திடீரென்று நோய்வாய்ப்பட்டார். எனக்கு மிகவும் வேண்டப்பட்டவர். இரண்டு மூன்று நாள் சுரம் அடித்தது. முனிசிபல் டிஸ்பென்ஸரியில் சென்று வழக்கமான மிக்சரையும், மாத்திரைகளையும் சாப்பிட்டும் பலனில்லை. பின் ஒரு அலோபதி (M. B. B S.) யாரிடம் சென்று ஸ்ட்ரெப்டோ பெனிசிலின், ப்ரோகையின்

பெனிசிலின், எல்கோசின் மாத்திரைகள் கொயினு மிக்ஸரையும் சாப்பிட்டும் பலனில்லாமல் போகவே உடல் மிகவும் பலவீனமடைந்தது. மேலும் வயிற்றுக் கடுப்பும் சேர்ந்து கொண்டது. பின் என்னிடம் "நீங்கள் எல்லாம் இருந்தும் பார்த்துக்கொண்டே இருக்கிறீர்களே". என்றார். பெரிய டாக்டர்கள் கைவிட்ட பின் தானே எங்களிடம் வருகிறீர்கள்" என்று சொல்லிக்கொண்டு அவரை முறைப்படி பரிசோதித்து விட்டு இரத்தத்தை ஸ்லைடில் தடவி எடுத்துக் கொண்டேன். டைபாய்டு சுரத்தின் குறிகள் இல்லாவிட்டாலும் எதற்கும் விடால் பரிசோதனை ஒன்றும் செய்து விடலாம் என்று அதற்கும் 5 C. C. இரத்தம் எடுத்துக் கொண்டேன். இதன் முடிவு: இதில் டைபாய்டு O. & H. 1 :50 திரவப் படுத்தினது. கிரிமி காணப்படவில்லை. அதே போன்று AH. BH. கிருமிகளும் காணப்படவில்லை. வெள்ளை கெபி விதங்களின் எண்ணிக்கை.

| | |
|---|---|
| பாலி மார்ப் | 72% |
| லிம்போசைட் | 21. 5% |
| மானோசைட் | 2. 5% |
| ஈஇயோ சினோபிலியா | 4% |
| பேசோ பிலியா | (இல்லை) |

இரத்த பரிசோதனை

வெள்ளை கெபிகள்:— பாலி மார்புலியூகோசைடோசிஸ் வியாதிக்குறிகள் காணப்பட்டன. விஷத்தன்மையுற்ற மாறுதல்கள் காணப்பட்டன (டாக்சிக் )

சிவப்பு கெபிகள் :— இயற்கையான உருவம். ஸ்லைட் பரிசோதனையில் மலேரியா கிருமிகள் காணப்படவில்லை.



வெள்ளை கெபிகளின் முழு எண்ணிக்கையும் எண்ணப் படவில்லை. சுமார் 20,000 கெபிகளாவது இருக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

## சிகிச்சை முறை:

21—3—61

காலை 11 மணிக்கு ஹோமிசிலின் இஞ்செக்ஷன்.

மாலை 6 மணிக்கு ஹோமிசிலின் இஞ்செக்ஷன்.

22—3—61

காலை 10 மணிக்கு ஹோமிசிலின் ஊசி.

மாலையில் ஒன்றும் தரப்படவில்லை. சுரம் அடிப்பது நின்றுவிட்டது ஏற்கனவே இருந்த வயிற்றுக் கடுப்பு 20, 30 தடவை வெளியில் போவதினின்று 21—3—61 மாலைக்குள் 3 தரமாக மாறி 22—3—61 அன்று சுத்தமாய் நின்று விட்டது. பலவீனத்திற்கு ஹார்லிக்ஸ், க்ளூகோஸ் சாப்பிடுமாறு சொன்னேன். 23—3—61 முதல் 25-3-61 முடிய அஸ்கார்பிக் ஆசிட் 200 மிலிகிராம் இன்ட்ரா மஸ்குலர் இஞ்செக்ஷன் தினம் ஒன்று வீதம் செய்தேன்.

24—3—61ல் மீண்டும் இரத்தத்தை ஸ்லைடில் தடவி பரிசோதித்தேன். முடிவு

வெள்ளை கெபி விதங்களின் எண்ணிக்கை:

| | | |
|---|---|---|
| பாலிமார்ப் | — | 52 5% |
| லிம்போ சைட் | — | 39% |

| | | |
|---|---|---|
| மானோஸைட் | — | இல்லை. |
| இயோசினோபில் | — | 8.5% |
| பேசோபில் | — | இல்லை. |

இரத்தப் பரிசோதனையில் செபிகளின் உருவங்கள் சாதாரணமாக தென்பட்டன.

நியூட்ரோபில் ஒவ்வொரு பீல்டிலும் ஒன்றிரண்டு மட்டுமே காணப்பட்டது. விஷத்தன்மையுற்ற மாறுதல்கள் இல்லை.

இன்று காலையில் (30—3—61) இக் கேசுக்குரிய Mr. N. ஷண்முகம் பழைய மாதிரி நல்ல சுறுசுறுப்பாக வேலை செய்து இருப்பதைக் கண்டேன். எந்த விதமான தொந்தரவுமில்லை.

கேஸ் 2.

P. R. சிவசுப்ரமணி வயது 28 எறத்தாழ முந்தின கேசுக்கு சிகிச்சை அளித்தபோதே எனக்கும் கில்வாயு சுரத்தினைப்போல் சுரம் கண்டது. உடல் வலியும், இருமலும் கடுமையாய் இருந்தது. தூக்கம் வரவே இல்லை. கடுமையான கோப வெறியும், அதன் பலனாக வீட்டிலுள்ள பாத்திரங்கள் நொறுங்கலாயின. ப்ரையோனியா, ஆர்னிகா, நக்ஸ் வாமிகா, ஆண்டிம்டார்ட் முதலியன குறிகளுக்கு ஏற்ப சாப்பிட்டதும் சுமாரான தற்போதைய சாந்திதான் கிடைத்தது. பலவீனம் நாளுக்கு நாள் அதிகமாக கடுமையானது. இதே சமயம் மேற்படி (ஷண்முகம்) கேஸையும் கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது. கடைசியில் ஹோமிசிலின் ஒன்றை ஊசி போட்டுக் கொண்டேன். அதே மருந்தை மறுநாள் வடிகட்டப்பட்ட



(டிஸ்டில் வாட்டர் நீரில் கலக்கி அருந்தினேன் பலன் கைமேல் உடனடியாக கிடைத்து விட்டது. பின் வேறு மருந்துகளின் உதவியின்றியே தேறினேன்.

—o—

முடிவுரை: பெனிசிலின், ஸ்ட்ரெப்டோ மைசின், எல்கோமின் போன்ற ஆச்சரிய மருந்துகள் செய்யத் தவறியதை தங்கள் (திருவாரூர் Dr. சீனிவாசன் கண்டுபிடிப்பு) ஹோமிசிலின் ஆச்சரியப் படும்படியாக தீங்கின்றி மிகத்துரிதமாக செய்வதுடன் இஞ்செக்ஷன் செய்யும்போது வலியில்லாமலும் இருக்கிறது. போதிய விளம்பரமின்மையால் குடத்திலிட்ட விளக்குபோல் இருக்கக் கண்டேன். மிகக் கடுமையான சுரம் இரத்தத்தில் நியூட்ரோபில்ஸ் மிகவும் அதிகரித்தல் நாளைக்கு 20, 30 தரம் வெளிக்கு போகும் கடுமையான வயிற்றுக் கடுப்பு இதில் ஹோமிசிலின் துரிதமாகவும், ஆச்சரியப்படும்படியாகவும் நிவாரணமளிக்கிறது,

("ஹோமிசிலின்" திருவாரூர் தயாரிப்பு. இதை பவுடர் ரூபமாக தயார் செய்து ரப்பர் அலுமினிய மூடியிட்ட வயல்களில் பாட்டில்களில் விற்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி இந்தியாவில் வேறெந்த லாபரெட்டரியிலும் இந்நாள் வரையிலும் தயார் செய்யப்படவில்லை.)

ஆழ்வார்திருநகரி,

3—4—61.

டாக்டர் அவர்களுக்கு நமஸ்காரம், தங்கள் கு. எண். 172. 52ன்படி (மலப்பை வெளியே தள்ளியிருந்தால் உள்ள வியாதி.)

பயோடிசின், ரூடா, பிட்யூட்ரினை கொடுத்து வந்ததில் (இஞ். 6 போட்டதும் பூரணமாக குணமாகிவிட்டது. கல்காரப் 200 வீரியம் ஒருவேளையும், லைகபோடியம் 1வேளையும் கொடுத்து நிறுத்திவிட்டேன். இப்பொழுது பூரண குணமாகிவிட்டது.

ஷை கேசு சுமார் 5 மாதமாக மலப்பை வெளியே வந்திருந்தது பிரபலமான அலோபதி டாக்டர்களிடம் காட்டியதில் ஆபரேஷன் செய்ய வேண்டியிருக்குமென்று சொல்லிவிட்டார்கள். உங்கள் பயோடிசின் இஞ்செக்ஷன் 6. சுமார் 2 வாரத்தில் பூரண குணமளித்துவிட்டது.

ஹோமியோபதி வைத்தியத்திற்கே பெருமை தருவதாகும். இப்புகழ் தங்கள் ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட்டிற்கும், டாக்டர் சீனிவாசன் அவர்களுக்குமே ஆகும்.

திருவேங்கிடத்தய்யங்கார்



# வட்டாரச் செய்திகள்.

புதுக்கோட்டை மாவட்ட ரிஜிஸ்டர்ட் ஹோமியோபதியர்களின் மாதாந்திரக் கூட்டம் 12—3—61 அன்று Dr. அடைக்கலம் தலைமையில் கூடி மந்திரி பந்த் (உள்நாட்டு அமைச்சர்) காலமானதற்கு அனுதாபம் தெரிவித்தபின் டாக்டர் ஹானிமான் பிறந்ததின விழாவிற்கான பொறுப்புகளை காரியதரிசியிடம் ஒப்படைத்தபின் கலைந்தது.

— o —

## கீழத்தஞ்சை பதிவுபெற்ற ஹோமியோபதியர்களின் சங்கம்.

13—3—61 அன்று ஹோமியோபதியர்களின் மத்திய சங்க கூட்டம் புதுக்குடியில் Dr. S. சீனிவாசன் தலைமையில் கூடியது.

| | |
|---|---|
| சங்கத் தலைவர் | Dr. S சீனிவாசன் |
| ,, உபதலைவர் | Dr. P. இராஜகோபாலன் |
| ,, காரியதரிசி | R. புவனேஸ்வரன் |
| ,, கூட்டு காரியதரிசி | வி. ஜி. இராஜகோபாலன் |

சங்கத்தின் இரண்டாவது மகாநாட்டை கும்பகோணத்தில் மே மாதம் நடத்துவது என்றும் அம் மகாநாட்டிற்கு முதன் மந்திரி காமராஜ், சுதந்திர கட்சித் தலைவர் ஸ்ரீ சா. கணேசன் ஆகியோர்களை அழைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

சங்க ஆதரவில் கும்பகோணத்தில் ஓர் மருந்து விற்பனை நிலையம் துவக்குவதென்றும், நேர்முக பயிற்சி முகாம்கள் நடத்துவதென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

## மருந்து சட்டத்தை ஆயுர்வேத மருந்துக்கும் விஸ்தரிக்க யோசனை.

ooooooo

மருந்து சட்டத்தை ஆயுர்வேத யுனானி மருந்துகளுக்கு விஸ்தரிப்பது சம்பந்தமாக யூனியன் சர்க்கார ராஜ்ய சர்க்காரை கலந்தாலோசித்தது என்றும், ஆயுர்வேத, யுனானி மருந்துகளுக்கு அளிக்கப்பட்டுள்ள விலக்கை இரத்து செய்யும் வகையில் 1940ம் வருஷத்திய மருந்து சட்டத்தில் "மருந்து" என்ற பதத்திற்கான வியாக்கியானத்தை திருத்த தமிழ்நாட்டு சர்க்காருக்கு யாதொரு ஆட்சேபம் இல்லை என யூனியன் சர்க்காருக்கு தெரிவிக்கப்பட்டது என்றும் தமிழ்நாடு அசெம்பிளியில் ராஜ்ய சுகாதார மந்திரி ஸ்ரீ எம். ஏ. மாணிக்கவேலு கூறினார்.

—o—

தினமணி,
20—3—61.

தென் சென்னை பதிவு பெற்ற ஹோமியோபதியர்கள் மாதாந்திரக்கூட்டம் 19-3-61 அன்று 77, இராமகிருஷ்ண மடம் ரோடு, சென்னை–28 'பால நிலையத்தில்' நடைபெற்றது.

—o—

மதுரை மாவட்ட தேசிய பதிவு பெற்ற ஹோமியோபதியர்கள் மாதாந்திரக்கூட்டம் 19—3—61 அன்று Dr. V. R. சுப்ரமணியம் தலைமையில் கூடியது. Dr. M. கோபாலகிருஷ்ணனும், D. S. ரங்கராஜனும் க்ஷயரோகம் (டியூபர் குளோஸிஸ்) என்பதை பற்றியும், Dr. K. சுப்பாராவ் ஜீரணம் (டைஜஷன்) என்பதைப்பற்றியும் பேசியபின் கூட்டம் கலைந்தது.



அம்பாசமுத்திரம் பதிவுபெற்ற ஹோமியோபதியர்களின் சங்கம் 26—3—61 அன்று கூடி ஹானிமானின் பிறந்த தின விழாவை மே-மீ 14உ சேரன்மாதேவியில் கொண்டாடுவது என தீர்மானித்தபின் முடிவடைந்தது

—o—

திருச்சி தி ஆல் தமிழ்நாடு ஹோமியோபதி மெடிக்கல் சங்கம் 26-3-61 அன்று திருவாரூர் ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்டியூட் டைரக்டர் டாக்டர் ஸ்ரீ சீனிவாசன் அவர்கள் தலைமையில் கூடியது. அதில் அவர் "உண்மையான ஹோமியோபதியும், தற்கால நோய்களின் ஆராய்ச்சியும்" என்பதைப்பற்றி பேசினார்.

—o—

T. K. A. மணி L. H. M: அவர்கள் நத்தம் என்னுமிடத்தில் மிகப்பெரிய ஆஸ்பத்திரியை திறந்துள்ளார். அன்னார் ஸ்தாபனம் விரைவில் முன்னிலைக்கு வர இறைவன் அருள் புரிவாராக.

—o—

Dr S. பார்த்தசாரதிக்கும் திருமதி பிரேமாவதிக்கும் பொன்மலையில் 29—3-61 அன்று திருமணம் நடந்தது. அவர்கள் என்றும் இன்புற்று வாழ இறைவன் அருள் புரிவாராக.

—o—

1961 ஏப்ரல் 10உ ஆல் தமிழ்நாடு ஹோமியோபதிக் மெடிக்கல் சங்கம் சுமார் 6 மணி அளவில் கூடி Dr. ஹானிமானின் பிறந்ததின விழாவினை கொண்டாடிற்று.

Dr. சதானந்தத்துக்கும் திருமதி சாந்தாவுக்கும் N. பறவூர் பெரும்படண்ணுதுறையில் திருமணம் 29—3—61 அன்று நடந்தது அவர்கள் என்றும் இன்புற்றுவாழ இறைவன் அருள்புரிவாராக.

—o—

Dr. K. M. முகமது ஜக்கரியாவுக்கும் திருமதி ஜமீலா பீவிக்கும் கோவைகோட்டை மேட்டில் 2–4–61 அன்று திருமணம் நடந்தது. அவர்கள் என்றும் இன்புற்று வாழ இறைவன் அருள்புரிவாராக.

—o—

31—3—1961 அன்று இக்கரை கடைவீதியில் ஹானிமான் ஹோமியோ கிளினிக் என்னும் ஓர்மருந்தகத்தை திறந்து மக்கள் பிணியை நீக்கும் பணியை மேற்கொண்ட Dr. T. R. சிவராமன் M. I H. அவர்களும், அவர்கள் ஸ்தாபனமும் முன்னேற இறைவன் அருள்புரிவாராக.

—o—

வடசேலம் பதிவுபெற்ற ஹோமியோபதியர்களின் சங்கம் 2—4—61 அன்று கூடி 3வது வருட புதிய நிர்வாக்ஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள்

| | |
|---|---|
| தலைவர்: | Dr. K. S. கண்ணையா |
| உபதலைவர்: | P. நஞ்சுண்ட ரெட்டி |
| காரியதரிசி: | G. P. சுந்தரம் செட்டி |
| உபகாரியதரிசி: | K. M. நடராஜன் |
| பொக்கிஷதார்: | R சோமசுந்தரம் அவர்கள் |

(ஃ)



# போலியைக் கண்டு அச்சம் ஏன்?

( அருள்மணி. )

"போலி ஹோமியோபதியர்களை வெளியேற்றுக!" என்று நமது சகோதரப் பத்திரிகை ஒன்று தலையங்கம் தீட்டி தன் குறைகளை வெளியிட்டுள்ளது. அக்குறைகளை ஒவ்வொரு ஹோமியோபதியரும் நடுநிலையில் நின்று பரிசீலிக்க வேண்டியது அவசியமே.

## எது போலி ?

—o—

"போலி" என்றவுடன் வெளியேற்ற வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவது இயற்கையே! ஆனால் எது போலி? எது உண்மை? என்பதைக் கண்டுகொள்ள வேண்டாமா? ஒவ்வொருவரும் அடுத்தவர்களை "போலி" என்று கூறுவதின் மூலம் பிரச்னைகளை சமாளித்துவிட முடியாது.

நாம் "போலி" என்று கருதுவது சில சமயங்களில் உண்மையாகவும் இருந்து விடுகிறது. உண்மை என்று கருதுவது போலியாகவும் இருக்கிறது. எனவே இதைக் கண்டு பிடிப்பதில் நம் ஆற்றலை செலவிட வேண்டும். அதை விடுத்து பொதுவாக "போலி" என்று கூறுவதில் அர்த்தம் என்ன?

## நீர் எப்படி ?

—o—

சங்கங்களும், மாநில கூட்டணியும் சரியாக செயல் படாமைக்கு முக்கியமாகத் தொழில் துறையில் போட்டி!

சிலருடைய தன்னலம்! கண்ணியக் குறைவான நடத்தை முதலியன காரணமாக இருக்கலாம் என்று கருத்து தெரிவிக்கிறது அப்பத்திரிகை.

ஒரு மாநில கூட்டணியும், அக்கூட்டணியை நடத்துகின்றவரும், (ஒரு மாபெரும் கூட்டணியைத் தலைமைப் பொறுப்பேற்று நடத்துகிறவர்) தொழில் துறையில் ஏற்படும் போட்டியைப் பற்றியோ அல்லது சிலருடைய தன்னலத்தைக் கருத்தில் கொண்டோ அல்லது சிலருடைய கண்ணியக் குறைவான நடத்தையைக் கருத்தில் கொண்டோ கூட்டணி சரியாக செயல்படவில்லை என்பது விந்தையே!

## கடமையைச் செய்தீரா ?

—o—

ஒரு சிலர் கண்ணியக் குறைவான நடத்தையைப் பெற்றிருக்கலாம். ஒரு சிலர் தன்னலம் கருதலாம் கண்ணியமுள்ள மற்றவர்கள் தன்னலமற்ற பெரியவர்கள் ஒரு சிலருக்காக ஒதுங்கி இருக்கின்றனரா அல்லது தாமும் அப்பாதையில் செல்கின்றனரா? என்பதை ஹோமியோபதியர்களுக்கு புரிய வைக்கவேண்டும்.

மாபெரும் கூட்டணியில் ஒரு சிலர் தவறாக நடக்கின்றனர் என்று கண்ணிய மேதைகளுக்குத் தெரிகிறது. ஆனால் கூட்டணி செயல்படவில்லை என்பதை தன்னலங் கருதா அத்தியாகிகள் உணருகிறார்கள். உடனே அவர்கள் செய்ய வேண்டியது என்ன? கூட்டணி என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யவேண்டும் அதற்கு வழியில்லையேல் தாங்களாவது வழி மறைக்காமல் கூட்டணியை விட்டு விடவேண்டும்.



## ஓடாத வண்டியோட்டி ?

கூட்டணி என்பதை ஒரு வண்டியாக வைத்துக்கொள்ளுங்கள் வண்டியில் உள்ள பிரயாணிகள் கூட்டணி உருப்பினர்கள். வண்டி ஓட்டி வண்டியை ஓட்டவில்லை. ஏனய்யா நீர் வண்டி ஓட்டவில்லை என்று கேட்டால் உள்ளே உட்கார்ந்திருப்பவர்கள் சரியாக இல்லை அதனால்தான் நான் வண்டி ஓட்டவில்லை என்கிறார்.

“உள்ளே இருப்பவர்களை சரியாக உட்காரச் செய்து ஓட்டேன் வண்டியை” என்றால் அதுவும் செய்யாமல் வீணாக குறை கூறிக்கொண்டு இருக்கிறார். “இல்லை நீயாவது இறங்கி போயேன்” என்றால் அதுவும் மாட்டேன் என்றால் என்ன செய்வது?

180825

## கலக்கம் ஏன் ?

உண்மையான தலைவர்கள் “தம்மைத் தலைவர்கள் என்று நினைக்கும் போலிகளைக் கண்டு” கலக்கம் அடையத் தேவையில்லை! மற்றவர்களை ஒன்றும் தெரியாதவர்கள் என்று அவர்கள் (தம்மைத் தாமே தலைவர் என்று நினைப்போர்) கூறினாலும் கூட உண்மையிலேயே அறிஞர்களுக்கும், மேதைகளுக்கும் எள்ளளவு நஷ்டம் கூட ஏற்பட முடியாது.

எனவே நாம் போலிகளைக் கண்டு அச்சமடையாமல் நாம் செயல்பட முனைந்தால் போலிகள் காளான்களைப்போல மறைந்தே போவார்.

## ஸ்ரீனிவாசன் எச்சரித்தார்.

அலோபதி சிகிச்சை அளிக்கும் ஹோமியோபதி டாக்டர்களைப் பற்றி டாக்டர் ஸ்ரீனிவாசன் அவர்கள் அடிக்கடி எச்சரித்து வருகிறார்கள். அவர்கள் நிச்சயம் ஒருநாள் அகப்பட்டுக்கொள்ளத்தான் போகிறார்கள். அவர்கள் இவ்வாறு போலி நிலையில் இருப்பதற்குக் காரணம் அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகளின் தரக்குறைவே யாகும். நாம் அவர்களைப் பற்றி கருத்தில் கொள்ளத் தேவையில்லை.

## கூட்டணி செயலாற்றட்டும்.

அத்தகையவர்கள் கூட்டணியிலோ, சங்கத்திலோ இருப்பின் அதன் நிருவாகத்தினர் அவ்வப்போது ஆவன செய்ய வேண்டுமேயன்றி "என் தம்பி பெரிய அயோக்கியன் நான் அப்படியல்ல" என்று தம்பட்டம் அடிப்பது போல பத்திரிகைகளில் எழுதுவதால் பயன் ஏதும் ஏற்பட முடியாது.

கூட்டணி நல்ல முறையில் செயலாற்றட்டும். இன்றேல் குறை கூறுவதை விடுத்து நல்ல முறையில் செயலாற்றுபவர்களிடம் கூட்டணி பொறுப்பு ஒப்படைக்கப்படட்டும்,

ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட், திருவாரூர்.

☆

## 25-வது நேர்முக வகுப்பு.

—o—

மே-மீ 8-ம் தேதிமுதல் 7 நாட்கள்.
25-வது ஸ்பெஷல் நேர்முக முதல் பிரிவு வகுப்பு.

—o—

(சர்க்கார் இவ்வாண்டு முடிவதற்குள் சட்டம் இயற்றப் போவதாலும் அதன் பிற்பாடு சர்க்கார் பரிட்சை தேர்வு எழுதி தேர்வு பெற்றால்தான் ஹோமியோபதி வைத்தியராக ஆக முடியும் என்பதாலும் இச்சந்தர்ப்பத்தை எல்லோரும் பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகிறது.)

இவ் வகுப்பின் கட்டணம் ரூ. 30/- தான். இவ் வகுப்பில் 200 மாணவர்களுக்கு மட்டும் இடம் உண்டு. இவ் வகுப்பில் இடம் கிடைக்காதவர்களுக்கு அடுத்து உடனே நடத்தப்படும் வகுப்பில் இடம் அளிக்கப்படும். ஏப்ரல்-மீ 28-ம் தேதிக்குள் முன்பணம் பூராவும் அனுப்பி இடம் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

இந்த 7 நாட்களில் வழக்கம்போல் நடத்தப்படும் எல்லா பாடங்களும் குறைவின்றி சொல்லிக்கொடுக்கப்படும்.

மாணவிகளுக்கு தனியாக இடவசதி செய்து தரப்படும்.

மருந்து, கருவி, உபகரணம் முதலியவை வாங்க நினைப்பவர்கள் வரும்போதே அதற்கான பணம் ஏற்பாடு செய்து கொண்டு வரவும்.

(உங்களுக்குத் தேவையான கருவிகள், உபகரணம் முதலியவை சப்ளை செய்ய தனி இலாகா உண்டு. மற்ற எந்த இன்ஸ்டிட்யூட்காரருக்கும் தெரியாத புது விபரங்கள் இந்த வகுப்பில் சொல்லிக் கொடுக்கப்படும்.)

என்னென்ன கிருமிகள் இருந்தால் என்னென்ன வியாதிகள் உண்டாகுமென்றும் விபரமாக அறிந்துகொள்ள

## "ஒரு ஸ்பெஷல் வகுப்பு"

நமது நேர்முக வகுப்பின் கூடவே 3 நாட்களுக்கு தனியாக நடத்தப்படும்.

நமது நேர்முக வகுப்பு மாணவர்கள் மாத்திரம் இந்த வகுப்பிற்கு தனியாக மேற்கொண்டு ரூ. 10/- செலுத்தினால் போதுமானது.

இதற்காக தனி பாடங்கள் அச்சிட்டுக் கொடுக்கப்படும். மேற்சொன்ன பூதக்கண்ணாடி பரிசோதனை தெரிந்திருப்பது ஹோமியோபதியர்களின் முன்னேற்றத்திற்கு ஒரு திறவுகோல்.

(இந்த கிளாசில் 100 மாணவர்களுக்கே இடமிருப்பதால் உடனே உங்கள் இடத்திற்கு விண்ணப்பித்து ரிசர்வ் செய்து கொள்ளுங்கள்.)

(பெண்களுக்கு தங்க தனி இட வசதி வழக்கம்போல்.)



நமது டைரக்டர்: "மைக்ராஸ்கோப்" மூலம் ரத்தப் பரிசோதனை நடத்துகிறார்.

ஹோமியோபதி டாக்டர்களுக்கும்
நோயாளிகளுக்கும்

## ஒரு அரிய வாய்ப்பு.

☆

நமது லாபரடரியில் கீழ்க்கண்ட பரிசோதனைகள் செய்யப்படும்

குறைந்த செலவில்

### வியாதிகளை நிர்ணயிக்க

ஹோமியோபதியர்களுக்கு தேவையான வாய்ப்பு

பல ஹோமியோபதி டாக்டர்களின் வேண்டுகோளுக்கிணங்க

சிவப்பு, வெள்ளை முதலான செபிகளின் எண்ணிக்கை
ரத்தத்தில் இயோசினோபிலியா,
க்ஷயரோகப் பூச்சி,
மற்ற கிராம், நெகடிவ், பாசிடிவ் கிருமிகள்.

கோழை பரிசோதனை
மலம் பரிசோதனை
சிறுநீர் பரிசோதனை
**E. S. R.......................**

இவைகளெல்லாம் வெகு துரிதமாக செய்து கொடுக்கப்படும்.

விபரத்திற்கு எழுதுக:

## ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

காபில்சிரப்: *ஆஸ்துமா ஸ்பெஷல் தயாரிப்பு*

கார்டியாடோன்: *சிறந்த இருதய நோய் நிவாரணி.*

ஷார்க் ஆரஞ்சு: *அயம், கால்சியம், தாது உப்புகளும் பழ சத்துகளும் சேர்ந்த வலிவூட்டும் டானிக்.*

எபடால்: *ஹோமியோபதி முறையிலேயே சிறந்ததொரு இருமலை நிவர்த்திக்கும் சிரப்.*

---

## பெண்களுக்கு

லாசோன்: *கருப்பாசய டானிக்.*

ஏஸ்ட்ரால்: *பெண் ஹார்மோன் சத்து.*

டெலிவரிசி: *சுகப்பிரசவ மருந்து (பாரதம் முழுவதும் பிரசித்திப்பெற்றது)*

கிட்டிடிராப்ஸ்: *குழந்தை வளர்ச்சிக்கு சொட்டு டானிக்.*

பலன்சா: *மூலத்திற்கு.*

பாலாசவி: *குழந்தை ஈரல்குலை கட்டிகளுக்கு சிறந்த மருந்து.*

# சில ஸ்பெஷல் தயாரிப்புகள்.

## லாசோன்.

(ஹோமியோபதி தயாரிப்பு)

சிறந்த கருப்பாசய டானிக். தாது உப்புகள் விபர்னம், அலெட்ரிஸ், லாசோன், அசோகா மற்றும் சில டிஞ்சர்கள் சேர்த்து ஹோமியோ முறையில் தயாரிக்கப் பட்டது.

எல்லாவிதமான ஸ்திரிகளின் வியாதிகளையும் சீக்கிரத்தில் குணப்படுத்தும்.

4 அவுன்ஸ் பாட்டில் ரூ. 3—00

⊕

## பயோபாஸ்பேட்ஸ்.

(ஸ்பெஷல் ஹோமியோபதி முறைப்படி செய்தது)

இதில் பெர்ரம், கால்சியம், கேலியம், மெக்னீஷியம், சோடியம், மேங்கனீஸ், சிங்க் முதலியவைகளின் பாஸ்பேட்டுகள் தகுந்த அளவில் கலக்கப்பட்டிருக்கின்றன.

சிறந்த ரத்த விருத்தி, நரம்பை பலப்படுத்தும் தாது உப்பு டானிக் இனிப்பானது, நவீனமானது.

6 அவுன்ஸ் பாட்டில் ரூ. 5—00

(ஆல்கஹால் கலவாதது)

## ஹோமோகால்சின்:

கால்சியம் போஷாக்குகளுக்கு சாக்லெட் ருசியுள்ள டானிக் க்ரானியுல்கள் புதுமையான மருந்து சக்திவாய்ந்த மருந்து.

கால்சியம் சுண்ணாம்பு சத்து தேவையுள்ளவர்களுக்கு ஒரு வேளை தினம்.

4 அவுன்ஸ் பாட்டில் ரூ. 3—62

⊕

## அல்பால்பா B:

அல்பால்பா, நக்ஸ், அவனு, சைனு, அஸ்வகந்தா இவைகளுடன் இயற்கை வைடமின் B C. முதலியவைகள் சேர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்ட ருசியான பொதுவான புஷ்டி தரும் டானிக்.

4 அவுன்ஸ் ரூ. 3—25

⊕

## ஹெபடோனின்:

வீரியக்குறைவையும் முதுமையையும் மாற்றி, வலிமை யூட்டும் சுரப்பிகளின் டானிக்.

30 வயதுக்கு மேற்பட்ட யாவரும் கைவசம் வைத்து சாப்பிடவேண்டியது.

4 அவுன்ஸ் ரூ. 4—00

## "ஆர்னிகா" ஹேர் ஆயில்.

"ஆர்னிகா" சத்து கலந்த சிறந்த நறுமணமுள்ள வாசனைத் தைலம். தலைப்பொடுகு, மயிர் உதிர்தல் மயிர்க்காம்பு வியாதிகள், ஒற்றைத் தலைவலி, இவைகளை குணப்படுத்தும்.

4 அவு. பாட்டில் ரூ. 2—50

## "காந்தரிடின்" ஹேர் ஆயில்.

"காந்தரிஸ்" சத்துடன் தயாரித்த நறுமணம் வீசும் ஹேர் ஆயில், தலைமயிர் உதிர்தல் வழுக்கை, பொடுகு முதலியவற்றை குணப்படுத்தும்.

4 அவு. பாட்டில் ரூ. 1—62

## மருக்கொழுந்து ஸ்நானத் தைலம்.

ஸ்நானத்திற்கு உகந்த நறுமணம் வீசும் தைலம். மூளைக்கும் கண்ணிற்கும் குளிர்ச்சி ஊட்டி, வெட்டைச் சூட்டைத் தணிக்கும் சிறந்த தைலம்.

2 அவு. ரூ. 0—62
5 அவு. ரூ. 1—25.

பெரிய சைஸ்களுக்கு தனியாக எழுதவும்.

நம் மருந்துகள், இன்ஜெக்ஷன்கள் முதலியவை கீழ்கண்ட இடங்களில் எப்பொழுதும் கிடைக்கும்.

—o—

தஞ்சாவூர் ஜில்லா:

1. Dr. M. சம்பங்கம்,
*சரஸ்வதி மெடிகல் ஸ்டோர்ஸ், தெற்கு வீதி, தஞ்சாவூர்.*

2. Dr. P. G. ராஜன்,
*ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், நீடாமங்கலம்.*

3. Dr. P. தங்கராசு, *முத்துப்பேட்டை.*

4. Dr. S. A. பசூதீத் அஹமத்,
*வடகரை, மாயவரம் தாலுக்கா.*

5. Dr. R. V. நாதன், *சீர்காழி.*

திருச்சி ஜில்லா:

6. M/s. சரசு ஹோமியோ மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
116/9, *பாலக்கரை, திருச்சி—8.*

7. Dr. V. மகாதேவன்,
*திருச்சி ஹோமியோ மெடிக்கல் ஸ்டோர்ஸ்,*
34, *சிங்காரத்தோப்பு, திருச்சி—8.*

8. Dr. S. நாராயண அய்யங்கார்,
*லெக்ஷ்மி ஹோமியோ ஸ்டோர்ஸ், துறையூர்.*

9. M/s. கமலா மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
நெ. 13, சுந்தர் மெயின் ரோடு, குளித்தலை.

10. Dr R. மாரிமுத்து செட்டியார்,
மெயின் பஜார் ரோடு, மணப்பாறை.

மதுரை ஜில்லா:

11. Dr. M. கோபாலகிருஷ்ணன்,
26, பாண்டிய வேளாளத் தெரு, மதுரை.

12. Dr. O. V. நரசிம்மன்,
மதுரை ஹோமியோ ஸ்டோர்ஸ்,
223, சின்னக்கடைத் தெரு, மதுரை.

13. Dr. A. K. ஷம்ஸுதீன்,
ஹோமியோ மெடிக்கல் ஷாப்,
மெயின் ரோடு, திண்டுக்கல்.

திருநெல்வேலி ஜில்லா:

14. M/s. D. S. ஆபிரகாம் & கோ.,
மருந்து ஷாப், நாசரேத் & திருநெல்வேலி ஜங்.
& ஆறுமுகநேரி.

15. M/s அந்தோனி ஸ்டோர்ஸ், நாசரேத்.

16. Dr M. M. சேவியர்,
ஹோமியோ மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
131, மார்க்கெட் பஜார், தென்காசி.

ராமநாதபுரம் ஜில்லா:

17. Dr. R. பள்ளிக்கொண்டப்பெருமாள்,
கோமதி மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
சங்கரநயினார்கோயில்.

கோயமுத்தூர் ஜில்லா:

18. Dr. K. தாமோதரன்,
ஐக்கிய வைத்திய நிலையம்,
100 அடி ரோடு, கோயமுத்தூர்.

19. Dr. P. R. ராஜு
ஜெர்மன் ஹோமியோ ஸ்டோர்ஸ்,
பல்லடம் ரோடு, திருப்பூர்.

20. M/s. ஜானி பார்மஸி,
வசந்தா ரோடு, தாராபுரம்.

சேலம் ஜில்லா:

21. Dr. M. P. குணவான் சிங்,
சிங் டிரக் ஸ்டோர்ஸ்,
40, அரிசிபாளையம், சேலம்—2.

22. Dr. A. சுப்ரமணியம், மானேஜர்,
மேட்டூர் மில் தொழிலாளர் கோவாப்பரேட்டிவ் ஸ்டோர்,
சேலம் கேம்ப் மேட்டூர் அணை R. S.

23. Dr. R. பாலுசாமி,
பாலு பார்மஸி, ஆத்தூர் ரோடு, ராசிபுரம்.

தென் ஆற்காடு ஜில்லா :

24. Dr. G. R. S. மூர்த்தி,
இந்தியன் மெடிக்கல் ஸ்டோர்ஸ், சிதம்பரம்.

சிங்கப்பூர்:

25. Dr. N. K. S. அய்யூப்,
(110, East Coast Road) சிங்கப்பூர்—16.

சிலோன்:

26. Dr. A. கிருஷ்ணசாமி,
ஐந்துசந்தி, முசிலிம் வார்டு, யாழ்பாணம்.

180825